R 5388

# மூப்பர்களுக்கு பரிசுத்த பவுலின் அறிவுரைகள்

# ST.PAUL'S EXHORTATION TO ELDERS

**"நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்" – அப் 20:29,30.**

எபேசு சபையின் மூப்பர்களுக்கு இந்த வார்த்தைகள் எழுதப்பட்டன. பரிசுத்த பவுல், எருசலேமை நோக்கிப் பிரயாணம் பண்ணும்போது, எபேசுவிலிருந்து வெகு தொலைவில் தாம் இல்லை என்று கண்டறிந்தார். ஆகவே அங்கு அவர்களை மீண்டுமொருமுறை வந்து சந்திக்க ஆவலாயிருப்பதாகவும், சிறிது நேரம் தங்கியிருப்பேன் என்றும் தெரியப்படுத்தி அங்குள்ள மூப்பர்களுக்கு கடிதம் அனுப்பினார். அவர்கள் வந்து அவரோடு நீண்ட கலந்தாய்வுக் கூட்டம் நடத்தினர். இந்தப் பாடத்தின் திறவு வசனமும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட செய்தியின் ஒரு பகுதியாகும். அவர்களை தாம் மீண்டும் சந்திக்கமுடியாது என்றும், ஆகவே உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென புத்திமதியாக அவர்களிடத்தில் அவர் கூறினார். ஒவ்வொருவரும் மற்றவர்களைக் காட்டிலும் தன்னைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்கவேண்டியது கடமையாகிறது. தன் சொந்தஆவியை அடக்க ஒருவன் கற்காவிடில், மற்றவர்களை ஆளுவதற்கான முறையான நிலைமையை அடையமாட்டான்.

எல்லா மூப்பர்களிடத்திலும் இது குறிப்பாக உண்மையாகிறது. அவர்கள் தங்களை விழிப்பாய் கவனிக்கவேண்டும். ஏனெனில் சபை அவர்களுக்குக் கொடுத்திருக்கிற மேன்மையினிமித்தமாக, அவர்கள் சுய முக்கியத்துவம் வாய்ந்தஉணர்வுகளால் இறுமாப்படையும் வழியில் அடித்துச் செல்லப்படும் அபாயத்திலுள்ளனர். கர்வமுள்ளவர்களாக அவர்கள் மாறக்கூடிய அபாயத்திலுள்ளனர். ஆகையால் தங்களைத் தாங்களே கவனித்துப் பார்க்கவேண்டும் என்றும், தம் மந்தையை மேய்க்க தேவன் நியமித்ததால், அதையும் கவனிக்கவேண்டும் என்பதே கொடுக்கப்படுகிற செய்தி. அவர்கள் சபைக்கு பிரதிநிதிகளாக இருப்பதோடுகூட, கர்த்தருக்கும் பிரதிநிதிகளாக இருக்கிற தங்களது ஸ்தானத்தை புரிந்துகொள்ளவேண்டும். இந்த ஸ்தானம் தேவனால் நியமிக்கப்பட்ட வழிமுறைப்படி, சபையின் ஜனங்களால் கைகள் உயர்த்தப்படுவதன்மூலம் இவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இதனை சபையின் வார்த்தையாக எடுத்துக்கொள்வதோடு மட்டுமல்லாமல், பரிசுத்தஆவியினால் அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று உணர்ந்துகொள்ளவேண்டும். கர்த்தரது நாமத்தில் ஒரு முக்கியமான ஊழியம் அளிக்கப்பட்டிருப்பதையும், சபையை கண்காணிக்கும் இந்த மாபெரும் பொறுப்பு தங்களுக்கு அளிக்கப்பட்டிருப்பதையும் அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

### ஓநாய்களும், கள்ள செம்மறியாடுகளும்

ஏன் மூப்பர்கள் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும் என்பதற்கு இரண்டு குறிப்பிட்ட காரணங்கள் உள்ளன. அப்போஸ்தலரால் கொடுக்கப்படுகிற முதலாவது காரணம், அவர்களிடையே கொடிதான ஓநாய்கள் நுழையும், மந்தையை தப்பவிடாத அளவு ஆபத்து அவைகளால் இருக்கிறது. அந்த ஓநாய்கள் ஒருபோதும் மந்தையின் ஒரு பகுதியாக இல்லை என்பதே இங்கு சுட்டிக் காட்டப்படுவதாக தோன்றுகிறது. ஆயினும் அவைகள் தங்களை ஓநாய்களாக வெளிப்படுத்தாது. ஓநாய் சுபாவமுள்ள ஒரு குறிப்பிட்ட வகுப்பாராகிய ஜனங்கள், தங்களை சபையோடு ஐக்கியமுள்ளோராக வெளிப்படுத்த முனைவார்கள் என்பதே அப்போஸ்தலரின் எச்சரிப்பின் வார்த்தைகள். நம் கர்த்தர் எச்சரித்துக் கூறினார்; "கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாய் இருங்கள், அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்" – மத் 7:15. வஞ்சிக்கும் சிந்தை கொண்டோராய் இருப்பதை இவ்வார்த்தைகள் குறிப்பாய் சுட்டுவதாக காணப்படுகிறது. செம்மறியாடுகளைப் போல் நடந்துகொண்டு, செம்மறியாடுகளோடே சுற்றித்திரிந்து, தங்களை செம்மறியாடுகளாக முன்நிறுத்தி, செம்மறியாட்டின் ஆடையை அணிந்திருந்தாலும், நிஜமான செம்மறிஆடாக ஒருபோதும் இருக்கமாட்டார்கள். அவர்கள் மந்தைக்குள் வந்திருப்பதன் நோக்கம் சுயநலமானது, செம்மறிஆடுகளிடையே ஓநாய்களாக ஆதிக்கம் செலுத்துவதே அவர்களது இயல்பு. ஓநாய் ஆட்டைக் குறித்து கவலைகொள்ளும், எதற்காகவெனில் அதைக் கொல்ல வேண்டும், அதன் இரத்தத்தை உறிஞ்சவேண்டும் என்ற உள்நோக்கத்திற்காகவே.

ஆகவே, ஒரு வகுப்பார், நாம் கற்பனை செய்யும் வகையிலான எக்காரணமுமின்றி, சத்தியத்தைப் புரட்டி, மந்தையைக் குழப்பும்படியான விவாதங்களை தூண்டிவிட்டு, மந்தையைக் காயப்படுத்தி, புதுசிருஷ்டிகளாக இருப்போரை அழிப்பார்கள், மரணத்துக்குள் செல்லும்படி கீழ்நோக்கி இழுப்பார்கள் எனத் தெரிகிறது. இப்படிப்பட்ட வகுப்பார் மறைமுகமாக இந்த யுகம் முழுவதும் இருந்து வந்திருக்கிறார்கள். ஆனால் செம்மறிஆடு ஓநாயாக மாறுவதாக குறிப்பிட்டுக் காண்பிக்கவில்லை, ஒருவேளை நம்மில் நன்கு அறியப்பட்டிருந்த சிலர், முன்பு ஒரு காலத்தில் செம்மறிஆடாய் இருந்தோர், பின்னாளில் ஓநாயின் சுபாவத்தை வெளிப்படுத்தக்கூடும். தங்களால் இயன்றளவு மந்தையைக் காயப்படுத்துவதில் பிரியப்படக்கூடும். அப்படிப்பட்டவர்கள் செம்மறிஆடுகளுக்குள் வந்திருந்து, செம்மறியாட்டின் இயல்புகளிலிருந்து தங்களை விலக்கிக்கொள்வார்கள். இப்படிப்பட்டவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்று கர்த்தரும் அப்போஸ்தலரும் நமக்கு அறிவுறுத்துகிறார்கள்.

ஓநாய்களிலிருந்து வரும் அபாயத்தோடுகூட, தங்களுக்குள்ளாகத் தோன்றும் அபாயங்களும் உள்ளன. இது ஒரு மிக நுட்பமான அபாயம் என அப்போஸ்தலர் சுட்டிக் காண்பிக்கிறார். ஓநாய்த்தனமான சுபாவம் உள்ளவர்களாக மட்டுமல்லாமல், இன்னும் கூடுதலாக, சபையில் போதக ஊழியத்தில் ஈடுபடுகின்ற சிலர், சீஷர்களை தங்களிடத்தில்

இழுத்துக்கொள்ளும் நோக்கத்துடன் மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள். தங்களுடைய சொந்த உடைமைகளாக்கும்படி அவர்கள் ஒருசிலரை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் இழுக்க முயல்வர். சபை கர்த்தருடைய மந்தை, சகோதரர்கள் அனைவரும் கர்த்தருடைய ஆடுகள் என்று புரிந்து ஏற்றுக்கொள்வதற்கு பதிலாக, அவர்களுடைய உணர்வுகள் எப்படியிருக்குமெனில், இது என் சபை, என் மந்தை என்று இருக்கும். வேத வசனங்களுக்கும் கர்த்தருடைய ஆவிக்கும் நேரெதிராக, சுயநல மனப்பான்மை இதில் தெரிகிறது. "தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்பது தெய்வீக அரசாங்கத்தின் கொள்கையாக உள்ளது. ஒரு உண்மை மூப்பராகவும், கர்த்தருடைய நிஜ ஊழியராகவும் இருக்க விரும்புபவர், இக்காரியங்களை நினைவில் கொண்டு, சுயத்தைத் தேடும் ஆவியின் எல்லாக் காரியங்களையும் தவிர்க்கவேண்டும். இல்லாவிடில் அவர் காயமேற்படுத்திக்கொள்வது நிச்சயம். அப்படிப்பட்ட வழிமுறையை பின்பற்றுவதால் தனக்கு மட்டுமல்லாமல் பிறருக்கும் காயமேற்படுத்துவார்.

**ஆற்றலின் விகிதாச்சாரத்துக்கேற்ற பொறுப்புணர்வு**

செம்மறியாடுகள் மிகவும் பயந்த சுபாவமுடைய மிருகங்கள். ஆகவே அதனை சிலவகையில் வழிநடத்தப்படவேண்டிய அவசியம் உள்ளது. மேய்ப்பன் இல்லாதபோது, தங்களிலுள்ள ஆடுகளிலிருந்து அவைகளுக்கான தலைவரை அவைகள் தேர்ந்தெடுக்கும் கட்டாயம் உள்ளது. ஆயன் இல்லாத நேரத்தில் ஆட்டு மந்தையில் சில ஞானமுள்ள ஆடுகள் இருக்கும். அதாவது, மந்தையில் உள்ள ஆட்டுக்கடாக்களை தலைவர்களாகக்கொண்டு மற்ற ஆடுகள் பின்பற்றக் கற்கவேண்டும். கிறிஸ்துவின் சபையில் மூப்பர்களாக மந்தையிலுள்ள மூத்தஆட்டுக்கடாக்கள் நியமிக்கப்படவேண்டும். ஆட்டுக்கடாக்களின் கொம்புகள் என்பது பாதுகாப்பை ஏற்படுத்துவதாயுள்ளன. இதைக்கொண்டு, விரோதியின் தாக்குதலின் நேரத்தில் அவனை விரட்டியடிக்க அவரால் முடியும்.அவ்வேளையில் ஆடுகள் அவருக்குப் பின்னால் பாதுகாப்பாய் நிற்கமுடியும்.

ஆனால் மந்தையிலுள்ள சில ஆட்டுக்கடாக்களால் – அதாவது, கர்த்தருடைய ஜனங்களில் சில குறிப்பிட்ட தலைவர்களால் எழும் அபாயம் குறித்து வேத வசனங்கள் பேசுகின்றன(எசே34:17–23). இந்தஆட்டுக்கடாக்கள் நீரோடைக்குச் சென்று கலக்கி சேறாக்கி, தண்ணீரை மாசுபடுத்திவிடுகின்றன. ஆட்டுக்கடாக்களும்(He-goats) இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன; கிறிஸ்துவின்சபையிலுள்ள சில மூப்பர்களது குணஇயல்பே இங்கு விளக்கப்பட்டுள்ளது. இது நம்மேல் இழப்பை ஏற்படுத்திவிடக்கூடாது. செம்மறிஆடுகளின் உரிமையாளர் சில சமயங்களில், வெள்ளாட்டை அந்த மந்தைக்கு தலைவராக உபயோகிப்பார்கள் என்று நாம்கேட்டிருக்கிறோம். ஏனெனில் செம்மறியாட்டைவிட வெள்ளாடு சண்டையிடும் குணமுள்ளது. இதனால் செம்மறியாட்டுக்கு தைரியத்தை ஊட்டும். கர்த்தருடைய மந்தையில் உள்ளோரில் எத்தனைபேர் வெள்ளாட்டால் வழிநடத்தப்படுகின்றனர் என்று நாம் அறியோம், ஆனால் யாராகிலும் வெள்ளாட்டின் சுபாவத்தை எப்பொழுதாகிலும் வெளிப்படுத்தினால், சபை அவரை தலைவராக்குவதை கண்டிப்பாக தவிர்க்கவேண்டும்.

முறையான தலைவர்கள் முறையான குணஇயல்பை காண்பிப்பார்கள். அவர்கள் மாபெரும் பொறுப்பை சுமக்கின்றபடியால், தலைவர்கள்மேல் சபை அதிகளவு இரக்கம் காண்பிக்கவேண்டும். ஆகவேதான் அப்போஸ்தலர் கூறுகிறார்; "அதிகஆக்கினையை அடைவோம் என்று அறிந்து என் சகோதரரே, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக". தனது ஆற்றலுக்கேற்ப அவர் அதிக பொறுப்பை பெற்றிருக்கிறார். ஆகவே மூப்பர்களது ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டிருக்கிற அனைவரும், மந்தைக்கு மாபெரும் ஆயனாக இருக்கிற கர்த்தரது பிரதிநிதிகளாக குறிப்பிடத்தக்க அளவுக்கு உள்ளனர் என்று தோற்றமளிக்கிறது.

———————————